விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 292 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 20 வெள்ளிக்கிழமை (07.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## இலங்கைக்கு எதிரான தீர்மானம்
# மேலதிக வாக்குகளால் ஜெனிவாவில் நிறைவேற்றம்

**ஆதரவாக 20 வாக்குகள் எதிராக 7 வாக்குகள்**

*(ஜெனிவா)*

*இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் என்ற தலைப்பில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.* *(11ஆம் பக்கம் பார்க்க)*

## ஐ.நா தீர்மானம் சீனா கடும் எதிர்ப்பு

(ஜெனிவா)

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள சீனா இலங்கையின் சுதந்திரத்திற்கான தனது உறுதியான ▷11



## வாக்கெடுப்பை புறக்கணித்த இந்தியா

(ஜெனிவா)

ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா புறக்கணித்துள்ளது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் 13 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேறியிருந்தது.

இலங்கை தொடர்பான தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பைத் தவிர்ப்பதாக ▷02

## ஜெனிவா பிரேரணையை முற்றாக நிராகரிக்கின்றோம்
### இலங்கை அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கொண்டு வரப்பட்டுள்ள புதிய பிரேரணையை முற்றாக நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஐ.நா அமர்வில் ▷11

### இலங்கையின் ஈடுபாடு அவசியம்
## ஜெனிவாத் தீர்மானத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைபேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதை வரவேற்றுள்ள ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை அரசாங்கம் ஐ.நா சர்வதேச சகாக்களுடன் தொடர்ந்தும் ஈடுபாட்டை வெளிப்படுத்த ▷11

### தமிழர்களின் நியாயபூர்வமான
# அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும்
## ஐ.நாவில் இந்தியா மீண்டும் வலியுறுத்து



*(ஜெனிவா)*

- அர்த்தபூர்வமான அதிகாரப்பகிர்வு வேண்டும்.
- 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல்.
- மாகாண சபைத் தேர்தல்களை முன்கூட்டியே நடத்துதல்.

*(11ஆம் பக்கம் பார்க்க)*



# இலங்கை மீதான போர்க்குற்றங்களுக்கு உள்நாட்டு பொறிமுறையின் கீழ் தீர்வு
## ஐ.நாவில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

- இறையாண்மை கொண்டதொரு நாட்டில் சர்வதேச தலையீடுகள் அவசியமற்றது.
- இலங்கை மீதான குற்றச்சாட்டுக்களை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல முடியாது. ▷02

### கோண்டாவிலில்
## ரயில் மோதியதில் இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் புகையிரதத்துடன் மோதி சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார். ▷11



## எதிர்வரும் டிசம்பர் மாதம் எரிபொருள் விலை அதிகரிக்கும்
### பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் எரிபொருள் விலை அதிகரிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று ஆற்றியவிசேட உரையில் அவர் இந்த ▷11

### தெல்லிப்பளையில்
## மின்னல் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ▷11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்கெடுப்பை...

ஜப்பான் முன்னர் அறிவித்துள்ளது. இலங்கையின் மனித உரிமைகள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அவசியம் என வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம-7)

## இலங்கை மீதான...

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் நேற்று இடம்பெற்ற இலங்கை தொடர்பான தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் இடம்பெற்ற ஊடாடல் பொது நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் கருத்துவெளியிட்டிருந்தார்.

அதில் இலங்கை மீதான போர்க் குற்றங்களுக்கு உள்நாட்டு பொறிமுறையின்கீழ் தீர்வுகாண எதிர்பார்த்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இறையாண்மை கொண்டதொரு நாட்டில் சர்வதேச தலையீடுகள் அவசியமற்றது எனவும், இலங்கை மீதான குற்றச்சாட்டுகளை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்ல முடியாது என்று தெரிவித்த வெளிவிவகார அமைச்சர், உள்நாட்டு பொறிமுறையின் கீழ் தீர்வுகாண்பதே பொருத்தமானது என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில், இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது வழக்கமான அமர்வில் முன்வைக்கப்பட்ட 51/5 என்ற இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான தீர்மானத்தை நிராகரிக்க வாக்களிக்குமாறு அமைச்சர் அலி சப்ரி உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.

அத்துடன், தீர்மானத்தின் 8 ஆவது சரத்தை முழுமையாக எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ம-7)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில்**
**9 பரப்புக் காணி விற்பனைக்கு**

- A9 வீதியிலிருந்து 200M தூரம்
- 20 அடிப் பாதையுடன்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500M தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 3 இலட்சம் மட்டும்
- பார்வையிடும் நேரம் - காலை 9.00 இருந்து மாலை 6.00 மணி வரை

(13029)

**077 874 8135**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில்**
**2 பரப்பு காணி விற்பனைக்கு**

- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி
- பார்வையிடும் நேரம்:- காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(13029)

**076 755 8606**


## 31ம் நாள் நினைவஞ்சலி

**அமரர் சிவானந்தமலர் விக்கினேஸ்வரன்**



பிறப்பு 22.05.1945 இறப்பு 07.09.2022

என்றும் எம் நினைவுகளில் பசுமையாக வீற்றிருக்கும் எமது குடும்பத் தலைவியின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
மேலும் எமது துயரில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

குடும்பத்தினர்
சுதுமலை தெற்கு, மானிப்பாய். (13025)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**திருமதி தங்கவேல் சிவமலர்**



மலர்வு : 26.06.1948
உதிர்வு : 07.09.2022

மீளாத் துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்தி சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்போமாக...

பொன்னகம், அல்வாய். (C-5045) குடும்பத்தினர்



## கண்ணீர் அஞ்சலி

அமரர்
**திருமதி நடராசா ஆச்சிமுத்து**
(சாயுடை மாவிட்டபுரம், தெல்லிப்பளை)


அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 13.04.1932 மறைவு 03.10.2022

ஜீவா (டென்மார்க்), ஜெகன் (பிரான்ஸ்),
ஜெனோ (டென்மார்க்), தனஞ்சயன் (டென்மார்க்)

ஜெகதீஸ்வரன் (குடும்பம்)
[ மருமகன் - டென்மார்க் ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி நேற்று வியாழக்கிழமை யாழ்.பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் ஆரம்பமானது. நேற்று ஆரம்பமான பட்டமளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் எனத் தொடர்ந்து மூன்று தினங்கள் இடம்பெற உள்ளது. பட்டமளிப்பு விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமை தாங்கி பட்டதாரிகளுக்கான பட்டங்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் தங்கப் பதக்கங்களையும் பரிசில்களையும் புலமைப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிப்பார்.

(படங்கள்-சிவசாந்தன், ரவிசாந்,கஜிந்தன்)

# ரமேஸ் மதுசங்கவிற்கு இம்முறை சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 36ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் அமர்வின் போதே யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் துறையில் ஊடகவியலில் திறமைச் சித்தி பெற்ற மாணவனான புத்தளம் மாவட்டத்தில் கொட்டகை என்னும் கிராமத்தைச் சேர்ந்த சேர்ந்த செல்வராஜா ரமேஸ் மதுசங்கவிற்கு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர். சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடக மாணவனாகப் படித்துக் கொண்டு ஊடகவியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நிலக்சன் 2007 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி அதிகாலை 5 மணியளவில் அவரது வீட்டில் வைத்து பெற்றோர் முன்னிலையில் ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

அவரது ஞாபகார்த்தமாக ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-33)

# தனியார் பேருந்து மீது கல்வீச்சுத் தாக்குதல்

## நாவற்குழியில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் சொகுசு பேருந்து மீது கல் வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபர்களின் கல்வீச்சுக்கு இலக்கான பேருந்தின் முன்பக்க கண்ணாடி சேதமடைந்த போதிலும் பேருந்தில் பயணம் செய்தவர்களுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)



யா/கோண்டாவில் இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் செல்வி.பாக்கியலட்சுமி மார்க்கண்டு அமரராகி ஒரு வருட பூர்த்தியை அனுஷ்டிக்கும் முகமாக "அஞ்சலி செய்வோம் வாரீர்" எனும் நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி கோண்டாவில் நெட்டிலுப்பாய் விநாயகர் ஆலயத் திருமறை மண்டபத்தில் இடம்பெற்றது.

# வல்லிபுர ஆழ்வாருக்கு நாளை தேர்த் திருவிழா



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்.வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 8.45 மணியளவில் இடம்பெற உள்ளது.

இவ்வாலய மஹோற்சவப் பெருந் திருவிழாவில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், மறு நாள் திங்கட்கிழமை காலை கேணித் தீர்த்தத் திரு விழாவும் அன்றைய தினம் மாலை கொடியிறக்க உற்சவமும் இடம்பெறும். (4-18)

# பொதுக் கூட்டமும் காலபோக கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

இருபாலை தெற்கு விவசாய சம்மேளனத்தின் பொதுக்கூட்டமும் காலபோக கூட்டமும் நாளை காலை 9 மணிக்கு இருபாலை தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்தக் கூட்டத்தில் மானியக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளமையால் 2022 ஆம் ஆண்டுக்கான சந்தா பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக்கொள்வதுடன் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் ந.கஜேந்திரகுமார் கேட்டுள்ளார். (4)

# சுயநினைவற்ற முதியவர் மருத்துவமனையில் சேர்ப்பு

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம்-மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 70 வயதான முதியவர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை காலை சாவகச்சேரி- நுணாவில் பகுதியில் வீதியில் சுய நினைவற்றுக் கிடந்த நிலையில் மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளார்.

குறித்த முதியவர் மூன்று தினங்களுக்கு முன்பாக வீட்டில் இருந்து காணாமல் போன நிலையிலேயே நுணாவில் பகுதியில் நினைவற்றுக் காணப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.குறித்த முதியவர் விபத்தில் சிக்கி சுயநினைவிழந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிற்கு பதிலடி கொடுத்தது
# தென்னாபிரிக்க அணி



இந்திய அணிக்கெதி ரான மூன்றாவதும் இறுதியுமான இருபது-20 போட்டியில் தென்னாபிரிக்க அணி 48 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் 03 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

Rilee Rossouw அதிக பட்சமாக ஆட்டமிழப்பின்றி 100 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு 228 என்ற வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணி 18.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 49 ஓட்டங்களினால் தோல்வியடைந்துள்ளது.

இந்திய அணிசார்பில் அதிகபட்சமாக தினேஸ் கார்த்திக் 46 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

ஆட்டமிழப்பின்றி 100 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்த தென்னாபிரிக்க அணியின் Rilee Rosso uw போட்டியின் ஆட்டநாயகனாகவும் தெரிவானதுடன், சூரியகுமார் யாதவ் தொட ரின் நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

3 போட்டிகளைக் கொண்ட இருபது-20 தொடரினை இரண்டுக்கு ஒன்று என்ற அடிப்படையில் இந்திய அணி கைப்பற்றியுள்ளது. (4)


## கண்ணீர் அஞ்சலி

யா/ நவற்கிரி அ.மி.த.க பாடசாலை
அதிபர் திரு.பா.குணாகரன்
அவர்களின் அன்புத் தாயார்
அமரர்
**பாலகிருஸ்ணன்**
**செல்வபாக்கியம்**



அவர்கள் 06.10.2022 அன்று இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(C-5046)

கோட்டக்கல்விப் பணிப்பாளரும்
அதிபர்கள் சங்கமும் கோப்பாய் கல்விக்கோட்டம்







வடமாகாண ரீதியாக இடம் பெற்ற 2022 ஆம் ஆண்டுக்கான மெய்வல்லுனர் விளையாட்டு போட்டிகளில் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை வீரர்கள் ஒரு தங்கம் மற்றும் நான்கு வெள்ளிப்பதக்கம் ஐந்து வெண்கலப்பதக்கங்களுடன் ஆண்கள் பிரிவில் 84 புள்ளிகளுடன் வடமாகாண வலய பாடசாலைகளுக்குள் மூன்றாம் இடத்தையும் மன்னார் மாவட்டத்தில் முதலிடத்தையும் பெற்றுள்ளனர். (படம்:-ஜோசப்நயன்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுகை அறிவித்தல் (IFB)
### சாவகச்சேரி நகராட்சி மன்றம்
### பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம், சபைநிதி வேலைத்திட்டம்

1. தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர்/செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி தொலைபேசி - 021 227 0498, 021 227 0806, தொலைநகல் - 021 227 0079, மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 2022.10.07 ஆம் திகதியிலிருந்து 2022.10.21 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5. ஒப்பந்தம் கையளிக்கப்பட தகுதி பெறுவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் நிதி அமைச்சு அல்லது உலகவங்கி அல்லது ஏற்றுக்கொள்ளப்படும் எந்தவொரு நிறுவனங்களினாலும் கறுப்புப் பட்டியல் படுத்தப்படாதிருக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரர்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) இல் கட்டடங்கள் நிர்மாணிப்புத் துறையில் பதிவினை கொண்டிருக்கவும் வேண்டும்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணமொன்றை தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி இடமிருந்து வேலை நாட்களில் 2022.10.07 ஆம் திகதியிலிருந்து 2022.10.21 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் பி.ப 2.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

7. கேள்விகளை இரு பிரதிகளில் தயாரித்து கோரப்படும் ஆவணங்களுடன் தனித்தனியாக இரு உறைகளில் இட்டு தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு 2022.10.21 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கமைவாக கேள்விப் பிணைமுறியானது கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.

8. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2022.10.14 ஆம் திகதி மு.ப 11.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**


| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை மில்லியனில் | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்விப் பிணை வைப்பு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | LDSP/NP/JAF/CUC/PT1/2021/02(2) | குப்பை வண்டில் தயாரித்து வழங்குதல். | 0.450 | 60 Days | C8/C9 | 49 Days | 4,500.00 | 06.01.2023 |
| 02 | NP/14/41(3)/2/CF/01/2022 | சிறுவர் பூங்கா காணிக்கு மதில் அமைத்தல் வேலைத் திட்டம், நுணாவில் | 5.169 | 90Days | C8/C7 | 63 Days | 51,700.00 | 20.01.2023 |

தலைவர்,
உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

2022.10.07

(C-5044)

# ஜனாதிபதி ரணில் இந்தியாவுக்கு விஜயம்



(கொழும்பு)

இலங்கையின் நிலைப்பாடு குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு விளக்கமளிக்க புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இலங்கை மெதுவாக ஸ்திரத்தன்மையை அடைந்து வருவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகளுக்கு இலங்கையில் பெரும்பான்மையானோர் ஆதரவளிப்பதாகவும் அதற்கு எதிராக சிலர் இருப்பதாகவும் தெரிவித்தார். (நி)

# 22 ஆம் திருத்தச் சட்டம் மீதான விவாதம் ஒத்திவைப்பு

## சபாநாயகர் அறிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்றில் நேற்றும் இன்றும் இடம்பெறவிருந்த அரசியலமைப்பின் 22 ஆம் திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதம் அடுத்த அவர்வுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக தீர்மானிக்கப்பட்டதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன பாராளுமன்றில் அறிவித்துள்ளார். (நி)

# இராசிபலன்

07.10.2022
புரட்டாதி 20, வெள்ளிக்கிழமை
துவாதசி காலை 7.17 மணிவரை
திரயோதசி பின்னிரவு 5.53 மணிவரை
சதயம் முன்னிரவு 7.04 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
பிரதோச விரதம்
சந்திராஷ்டமம் - பூசம், ஆயிலியம்

வளவன்




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.




உதவுவதாக சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு மறையும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது.




சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.




சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், கல்யானக் கனவுகள் நனவாகலாம், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு.




தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.




சந்தித்தவர்கள் மூலம் சந்தோசம் கிடைக்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், மனதில் நினைத்த புதிய திட்டங்கள் கைகூடும்.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு, சுப விரயங்கள் கூடும் நாள்.




உறவினர் வருகையில் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம்.




உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிரிகள் உதிரியாகும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.




மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும்.




உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், தூரதேசத்திலிருந்து ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

மற்றவர்களின் நியாயமான எதிர்பார்ப்புகளுக்குத் தலைவணங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கு நிதியுதவி வழங்கி நாடகம் ஆடுகிறது சீனா

## சுரேஷ் பிரேமச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகளுக்கான நிதியுதவி என்னும் பெயரில் சீனத்தூதரகம் கடந்த 2 ஆம் திகதி கொழும்பில் உள்ள தனது தூதரகத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரிடம் 43 இலட்சம் ரூபாவை சீனத்தூதுவரின் புலமைப்பரிசில் திட்டத்தின் ஊடாக வழங்கியுள்ளது.

இது தானே அடித்து காயப்படுத்திவிட்டு அந்த காயத்திற்கு தானே பொருத்தமற்ற மருந்தையும் இடுவதுபோல் உள்ளது என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள அரசு கட்டவிழ்த்துவிட்ட யுத்தத்திற்கு உறுதுணையாக இருந்து, இலங்கை அரசாங்கத்திற்கு கடன் அடிப்படையில் பல்லாயிரக்கணக்கான கோடி பெறுமதியான யுத்த தளபாடங்களைக் கொடுத்து, தமிழ் இன வழிப்புக்கு உடந்தையாக இருந்து செயற்பட்டதில் சீனாவிற்கு பாரிய பங்கு இருக்கின்றது.

இப்பொழுது சீன அரசாங்கம் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் மீது கரிசனை உள்ளது போல் காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றது. வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் மீதும் தமிழ் மாணவர்கள் மீதும் என்றுமில்லாத வகையில் தான் அக்கறையுடன் இருப்பதாகவும் காட்டிக்கொள்கின்றது.

மீனவர்களுக்கு உதவி செய்கின்றோம் என்ற போர்வையில் அவர்களுக்கு சில உலர் உணவுப் பொதிகளைக் கொடுப்பதும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவி செய்கிறோம் என்ற போர்வையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கும் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கும் சில இலட்சங்களைக் கையளிப்பதும் அதனூடாக தமிழ் மக்களுக்கு தான் உதவிகரமாக ஆதரவாக இருப்பதாகக் காட்டிக்கொள்வதும் தமிழ் மக்களை மிகமோசமாக ஏமாற்றும் ஒரு செயற்பாடாகும்.

யுத்தத்திற்குப் பின்னர், வீடுகளை இழந்த வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கு 50 000 வீடுகளை இந்திய அரசாங்கம் கட்டிக் கொடுத்தது.

யாழ்ப்பாணத்தில் மிகப் பிரமாண்டமான கலாசார நிலையம் ஒன்று இந்திய அரசால் அமைக்கப்பட்டது. மாணவர்களுக்கான பல்வேறுபட்ட புலமைப்பரிசில் திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இவ்வாறு பல்வேறுபட்ட உதவிகளை இந்திய அரசாங்கம் செய்து வருகின்றது. இந்த சூழ்நிலையில், இந்தியாவின் வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் எல்லைப் பிரச்சினையில் ஈடுபட்டுவரும் சீன அரசாங்கம், தென்பகுதியில் இந்தியப் பெருங்கடல் பிரதேசத்திலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி இந்தியாவை அச்சுறுத்த முயற்சிக்கின்றது.

இதற்கு இலங்கையின் வடபுலத்திலும் இந்தியாவின் தென்புலத்திலும் இருக்கும் ஈழத்தமிழர்களை சீன அரசாங்கம் பகடைக்காயாக பயன்படுத்த முயற்சிக்கின்றது. இந்த முயற்சியை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதுடன் ஏமாற்றுத்தனமான இத்தகைய நடவடிக்கையை சீன அரசு கைவிட வேண்டும் என்றும் கோருகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# வவு.தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் புதிய அலுவலகம் திறப்பு



(நெளுக்குளம்)

வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் புதிய அலுவலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 24 வருடங்களாக தனியார் இடங்களில் செயற்பட்டு வந்த தனியார் பேருந்து உரிமையாளர் சங்க அலுவலகம் திருநாவற்குளத்தில் சுமார் 82 இலட்சம் ரூபாய் பெறுமதியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமனால் திறந்து வைக்கப்பட்டது. (4-299)

# நள்ளிரவில் நூதன முறையில் பணம், நகை திருட்டு

## கிளிநொச்சியில் சம்பவம்

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்மடு நகர்ப் பகுதியில் நேற்று இரவு வீட்டு உரிமையாளர் உறங்கிக் கொண்டிருந்த வேளை கூரையைப் பிரித்து வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட ஐந்து பவுண் தங்க நகைகள், 49500 ரூபாய் பணம், பெறுமதி மிக்க தொலைபேசிகள் மற்றும் மோட்டார்சைக்கிளில் இருந்த எரிபொருள் என்பன களவாடிச்செல்லப்பட்டுள்ளன. வீட்டு உரிமையாளருக்கு தெரியாத வகையில் மிகவும் நூதனமான முறையில் திருடப்பட்டதுடன் அதிகாலை எழுந்து பார்த்த போதே வீட்டு உரிமையாளருக்கு தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன் தடயவியல் பொலிஸாரும் தருமபுர பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-316)

# எரிபொருள் நிரப்பிக் கொண்டிருந்த மோட்டார்சைக்கிள் தீப்பிடிப்பு




(நெளுக்குளம்)

வவுனியாவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளினை நிரப்பும் போது மோட்டார் சைக்கிள் ஒன்று தீப்பற்றி எரிந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. குறித்த சம்பவமானது வவுனியா ஹொறவப்பொத்தான பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 4 ஆம் திகதி பதிவாகியுள்ளது.

இதேவேளை எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் உடனடியாக செயற்பட்டு தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமையினால் பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டது. (4-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 240 | 280 | 300 |
| தக்காளி | 260 | 260 | 270 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 250 | 200 |
| கோவா | 420 | 400 | 400 | 450 |
| கரட் | 350 | 380 | 400 | 450 |
| பூசணி | 160 | 150 | 160 | 200 |
| புடோல் | 200 | 200 | 140 | 280 |
| வாழைக்காய் | 200 | 160 | 130 | 150 |
| சின்ன வெங்காயம் | 420 | 450 | 200-500 | 450 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 | 220 |
| பாகற்காய் | 800 | 800 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 280 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 180 | 200 |
| பயற்றங்காய் | 450 | 450 | 400 | 450 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 350 |
| பீற்றூட் | 160 | 250 | 300 | 360 |
| கறிமிளகாய் | 800 | 700 | 550 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 450 | 700 | 1000 |
| போஞ்சி | 600 | 400 | 420 | 450 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | — | 240 |
| கீரை - 1 பிடி | 60 | 60 | 120 | 120 |
| தேசிக்காய் | 400 | 500 | 500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 60-80 | 60-80 |
| இராசவள்ளி | 260 | 250 | 200 | 280 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 370 | 400 |
| முள்ளங்கி | 160 | 200 | 140 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 40 | 50 |
| ஈரப்பலா | 160 | 150 | 100 | 120 |

# கத்தியை காட்டி மிரட்டி 13 லட்சம் ரூபாய் கொள்ளை

(தருமபுரம்)

புல்மோட்டைப்பகுதியிலிருந்து பூநகரி பரமனை பகுதிக்கு கடந்த 4 ஆம் திகதி வாகனத்தை கொள்வனவு செய்வதற்காக 3 பெண்கள் உட்பட ஆண் ஒருவரும் சென்ற வேளை வாகனத்தை காட்டுவதாகக் கூறி கத்தியைக் காட்டி மிரட்டி 13 இலட்சம் ரூபாய் பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் பூநகரி பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டிற்கமைய பணத்தைத் திருடிய 6 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணையை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-316)

## வவு.மருத்துவமனையில் திடீர் பரிசோதனை

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் நேற்று பறக்கும் அணியினர் மருத்துவமனையை திடீரென பரிசோதித்துள்ளனர்.

குறித்த சோதனை நடவடிக்கையில் கொழும்பிலிருந்து வந்த பறக்கும் அணியினர் மருத்துவமனையிலுள்ள தாதியர், மருத்துவர், பொதுமக்கள், பணியாளர்கள், தாதிய பரிபாலகரின் கையொப்பமடங்கிய முக்கிய ஆவணங்களை பரிசோதித்துள்ளனர். (4-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் சில திணைக்களங்கள் பொதுப்பாதுகாப்பு அமைச்சின் கீழ்

(கொழும்பு)

ஆட்பதிவு திணைக்களம், குடிவரவு குடியகல்வு திணைக்களம் மற்றும் தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு சபை ஆகியன பொதுப்பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கான விசேட வர்த்தமானியை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 44 ஆவது சரத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னதாக ஆட்பதிவு திணைக்களம் தொழில்நுட்ப அமைச்சின் கீழும் குடிவரவு குடியகல்வு திணைக்களம் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் கீழும் இருந்தது.

அத்தோடு தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு சபை முன்பு பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இம்மாதத்துடன் காலாவதியாகும் பைசர் தடுப்பூசிகள்-சுகாதாரப்பிரிவு

(கொழும்பு)

கையிருப்பில் உள்ள பைசர் தடுப்பூசிகள் எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் காலாவதியாகவுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, 7 மில்லியன் பைசர் தடுப்பூசிகள் மாத இறுதியில் காலாவதியாகவுள்ளதாக அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால் மக்கள் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதில்லை எனவும் சுகாதாரப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (நி)

# மினுவாங்கொடையில் துப்பாக்கிச்சூடு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலி

(கொழும்பு)

மினுவாங்கொடையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் 2 மகன்கள் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை 7 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டிலேயே இவ்வாறு மூவரும் உயிரிழந்துள்ளனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கார் மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த சிலரே இதனை மேற்கொண்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இரு மகன்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தந்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# இலங்கையில் மூடப்படும் அமெரிக்க தூதரகம்

(கொழும்பு)

அமெரிக்க பெடரல் விடுமுறையை முன்னிட்டு இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் எதிர்வரும் திங்கட்கிழமை மூடப்படவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை தனது தூதரகப் பிரிவு மூடப்படும் என இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது. (நி-6)

# தேநீர் விலை குறைப்பு

(கொழும்பு)

பால் தேநீர் மற்றும் தேநீரின் விலைகளை குறைக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி பால் தேநீரின் விலையை 20 ரூபாவால் குறைத்து 100 ரூபாவாக விற்பதற்கும் தேநீரின் விலையை 20 ரூபாவால் குறைத்து 30 ரூபாவாக விற்பதற்கும் அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விலைக்குறைப்பானது உடனடியாக அமுல்படுத்தப்படவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உலகின் தலை சிறந்த தொழில்களில் ஆசிரியத்தொழில் முதன்மையானது

## ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

ஆசிரியர் மற்றும் ஆசிரியர் தொழிலுக்கான பொறுப்புகளை நிறைவேற்ற அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகின் தலைசிறந்த தொழில்களில் ஆசிரியர் தொழில் முதன்மையானது என்பதையும் உலகம் மற்றும் மனிதகுலம் வாழ்வதற்கு வழிகாட்டும் வழி காட்டி ஆசிரியர் என்பதையும் இது காட்டுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கோப்குழுவின் தலைவராக ரஞ்சித் பண்டார நியமனம்

(கொழும்பு)

கோப் குழுவின் புதிய தலைவராக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை கோப் குழுவின் தலைவராக பேராசிரியர் சரித்த ஹேரத் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


## தாயகம் அறக்கொடையின் அறிவித்தல்

தாயகம் அறக்கொடை நிறுவனத்தினால் இதுவரை காலமும் செய்யப்பட்டு வந்த எமது சேவையின் தொடர்ச்சியை வட மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிற்கும் விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு இக்கால சூழ்நிலை காரணமாக கல்வி பயில்வதில் சிரமங்களை எதிர்கொள்ளும் மாணவர்களிற்கு எமது தாயகம் அறக்கொடை நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள், சீருடைகள், காலணிகள் என்பவற்றை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

எனவே உதவி தேவைப்படும் பாடசாலை அதிபர்கள் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ளும் முன்னுரிமையின் அடிப்படையில் எமது உதவிகள் வழங்கப்படும்.

(13019)

021 222 4909, 077 775 0567



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 2<br>கி.பா: சூரி 3 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L,TO<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: B/9889 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: சூரி 9 செவ் 12 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: BSc (M.L.Science) - Jaffna அரச மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/9588 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம் : பரணி 3<br>கி.பா:32 சூரி 1 செவ் 6 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: Civil Engineer<br>எதிர்பார்ப்பு : உயர்பதவி<br>தொ.இ: B/9893 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: 45 சூரி 8 செவ் 6 இல்<br>உயரம்:155 cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/9589 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 50 ¾ சூரி 6 செவ் 9 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L (சொந்த வியாபாரம்)<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/9896 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 47 சூரி 12 செவ் 11 இல்<br>உயரம் : 4'10"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/9629 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா:11 ½ சூரி 11 செவ் 10 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: A/L சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: B/9904 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 46 சூரி 12 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/9634 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## சிறுவர் கதை



**என் கையால் எனக்கு அடியா?**

மரம் வெட்டுபவர்கள் ஒரு தேக்கு மரத்தை வேரோடு வெட்டி வீழ்த்தினார்கள். அதன் கிளைகளிலிருந்து ஆப்புக் கட்டைகள் செதுக்கினார்கள்.

அதைப் பயன்படுத்தி அடி மரப் பகுதியைப் பிளக்க முயன்றார்கள். ஆப்புக் கட்டைகளை பயன்படுத்தி அதிகம் சிரமப்படாமல் அடி மரத்தை பிளந்து விடலாம்.

அதைப் பார்த்து பெரு மூச்சு விட்ட தேக்கு மரம் "என் வேர்களைக் குறி வைத்த கோடரிகள் வெட்டிய போது நான் வருத்தப் படவில்லை. ஆனால் இப்போது என்னிடமிருந்தே உருவாக்கிய ஆப்புக்களை வைத்தே என்னைப் பிளக்கிறார்களே இது தான் எனக்குத் தாங்க முடியாத வேதனையாக இருக்கிறது" என்றது.

நூலகம்:- எந்த வீட்டில் நூலகம் இருக்கிறதோ அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது.

-பிளேட்டோ

"நூல் நிலையமே இக் காலத்தில் உண்மையான பல் கலைக்கழகம்"


-தாமஸ் கார்லைல்

நூல் நிலையம் இல்லாத வீடு உயிரில்லாத உடம்பு போன்றது. வீட்டிற்கு ஒரு நூல் நிலையம் தேவை. மனிதன் ஓய்வு நேரங்களில் நூல்களைப் படித்து அறிவைப் பெருக்க வேண்டும். தொழில் செய்து ஓய்ந்திருக்கும் போது அவனது உள்ளத்திற்கும் கிளர்ச்சி தரக் கூடியவை நூல்களே.

-தோமஸ் அல்வா எடிசன்

நூல் நிலையம் என்பது ஆடம்பரமான ஒன்றல்ல. வாழ்க்கையில் இன்றியமையாத தேவைகளில் அதுவும் ஒன்றாகும்.

-பீச்சர்



# சிலப்பதிகாரம்

**மிரண்டான் வாயிற்காவலன்**

## கற்பெனும் தீப்பிழம்பு




'ஆம் அரசியின் சிலம்புகளில் முத்துப் பரல்களே இருந்தன.

அப்போது சேவகன் ஒருவன் கைப்பற்றப்பட்ட சிலம்பைக் கொண்டு வந்தான். அதைப் பார்த்த நொடிப் பொழுதில் அந்தச் சிலம்பு தன்னுடையது தான் என்பதைக் கண்ணகி தெரிந்து கொண்டாள்.

சிலம்பு பிளந்தது. உள்ளிருந்த பரல்கள் அவை எங்கும் சிதறின.

அந்தச் சிலம்பிலிருந்து தெறித்த மாணிக்கப் பரல்களில் ஒன்று பாண்டியனின் உதட்டில் பட்டது. அவன் மடியில் விழுந்தது.

பாண்டியன் கோப்பெருந்தேவி உள்ளிட்ட மொத்த அவையே அதிர்ச்சியில் உறைந்தது.

அடக் கடவுளே...

இது கோப்பெருந் தேவியின் சிலம்பு அல்லவே! இதில் முத்துப் பரல்களுக்குப் பதில் மாணிக்கங்கள் அல்லவா இருக்கின்றன.

ஆராய்ந்து பார்க்காமல் வெளித்தோற்றத்தை நம்பி முடிவெடுத்தேன்.இப்படி ஒரு மாபாதகம் செய்து விட்டேனே!

நான் தான் கள்வன் நான் தான் கள்வன் என்று புலம்பினான் பாண்டியன். அவனுடைய பேச்சு குழறியது உதடுகள் துடித்தன. கைகள் நடுங்கின. உடல் முழுவதும் பதறியது.

பொற்கொல்லன் சொன்ன பொய்யைக் கேட்டு குற்றமற்ற ஒருவனைக் கொன்று விட்டேன்.நான் கொலைகாரன். கோவலனின் சிலம்பைத் திருடிக் கொண்ட திருடன். நான் அரசனில்லை. நானே கள்வன் நானே கள்வன்.

மக்களைக் காக்கிற பாண்டி ஆட்சி என்கிற நற்பெயரைக் கெடுத்தேன். என் பரம்பரைக்கே கெட்ட பெயர் வருகிறபடி நடந்துகொண்டேன். என் உயிர் போகட்டும் என்று சரிந்து விழுந்தான் பாண்டியன் .அந்த நொடியே இறந்து போனான்.

தகப்பனோ சகோதரனோ மகனோ யார் இறந்தாலும் அந்த இடத்தில் வேறொருவரைக் காண்பித்துச் சமாதானம் கூறலாம். ஆனால் கணவன் இறந்தால்?

கணவனை இழந்தவர்களுக்கு என்ன சமாதானம் சொல்ல முடியும்? யாரைக் கை காட்டமுடியும்? இந்த எண்ணம் கோப்பெருந்தேவியைக் கலங்கச்செய்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியே ஆட்சியின் உயிர்.
நடுநிலைமையே நீதியின் உயிர்.
~ ஜஸ்டினியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் போல இருந்தாலல்லோ

இலங்கை தொடர்பான தீர்மானம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேறியுள்ளது.

நேற்றைய தினம் (06) நடந்த வாக்கெடுப்பில் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 20 நாடுகளும் எதிராக 07 நாடுகளும் வாக்களித்ததன் அடிப்படையில் 13 மேலதிக வாக்குகளால் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தொடர்பில் ஈழத் தமிழ் மக்கள் திருப்தி அடைய முடியுமா? என்றால் இல்லை என்பதே அதற்கான பதிலாக இருக்கும்.

2009ஆம் ஆண்டு நடந்த தமிழின அழிப்புத் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் பட்டியல் படுத்தப்பட்டு அவை உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றக் கால அவகாசம் தேவை என இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்தது.

ஆனால் இன்றுவரை அந்த நிபந்தனைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

அதுமட்டுமன்றி தமிழ் மக்களுக்கு விரோதமான செயல்களைச் செய்வதிலேயே பேரினவாத ஆட்சியாளர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

இந்தநிலையில் இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இலங்கை அரசு அமுல்படுத்தும் என யாரேனும் நம்பினால் அதைவிட அறியாமை வேறு எதுவுமில்லை.

பரவாயில்லை. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்பதே அன்று தொடக்கம் இன்றுவரையான யதார்த்தம் என்பதால் அதுபற்றி இந்த உலகில் நாடற்ற தமிழ் மக்களாகிய நாம் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

ஆனால் தீர்மானங்களை நிறைவேற்றுவதிலும் நிபந்தனைகளை விதிப்பதிலும் அது தொடர்பில் ஜெனிவாவில் கூடிக் கலந்துரையாடுவதும் வாக்கெடுப்பு நடத்துவதும் அவமே காலத்தை கழிக்கின்ற காரியமேயன்றி வேறில்லை.

இதை நாம் கூறும்போது, இலங்கையின் இன்றைய கந்தறு நிலைக்கு உலக நாடுகளின் நடவடிக்கைகள் காரணமில்லையா? என்று நீங்கள் யாரேனும் கேட்டால், அதனை மறுதலிக்க நாம் தயாரில்லை.

அதேசமயம் இலங்கை ஆட்சியாளர்கள் ரோசம் உள்ளவர்களாக, மானம் உள்ள்வர்களாக, இலங்கையின் கெளரவத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று நினைப்பவர்களாக இருந்தால் பேரவைத் தீர்மானம் அர்த்தம் பெறும்.

ஆனால் இவர்கள் ஆட்சியில் இருந்து கொண்டு தேசிய சொத்தை அபகரிப்பவர்களாயிற்றே!

அப்படியாயின், இவர்கள் எப்படி பேரவைத் தீர்மானத்தை நிறைவேற்றுவார்கள்.

ஆக, **மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்** போல இருந்தாலன்றி, ரோசம் கெட்டவன் ராசாவிலும் பெரியவன் என்று நினைப்பவர்களுக்கு இந்தத் தீர்மானங்கள் எதுவும் உறைப்பாக இருக்கப் போவதில்லை என்பதுதான் உண்மை.

# இருமல் மருந்து உட்கொண்ட 66 குழந்தைகள் உயிரிழப்பு

## மேற்கு ஆபிரிக்காவில் சோகம்

(காம்பியா)

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள காம்பியா நாட்டில் 66 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இருமல் மற்றும் சளி மருந்தை எடுத்துக் கொண்டதால் அவர்கள் மரணம் அடைந்திருக்கலாம் என உலக சுகாதார அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள காம்பியா நாட்டில் உயிரிழந்த 66 குழந்தைகளும் உட்கொண்ட சிரப் மருந்து இந்தியாவின் மைதன் பார்மக்யூட்டிக்கல்ஸ் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டவை என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதில் குழந்தைகளின் உயிரிழப்பிற்கு மெய்டன் பார்மாசூட்டிகல்ஸ் தயாரித்த நான்கு மருந்துகளுக்கும் தொடர்பு இருக்கலாம் எனவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலால் உலக நாடுகள் அதிர்ச்சியடைந்துள்ளன. இவ்விடயம் தொடர்பில் உலக சுகாதார அமைப்பு டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளதாவது,

கடுமையான சிறுநீரக பிரச்சினை ஏற்பட்டு 66 குழந்தைகள் உயிரிழந்ததற்கும் இந்த 4 மருந்தும் வழிவகை செய்யலாம். இந்த இளம் உயிர்களின் இழப்பு அவர்களது குடும்பங்களுக்கு மனவேதனையை அளித்துள்ளது.

அந்த நான்கு மருந்துகளும் இந்தியாவின் மெய்டன் பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட் மூலம் தயாரிக்கப்படுகிறது. இதனால் அந்த நிறுவனத்திடமும் மற்ற உயரதிகாரிகளுடனும் உலக சுகாதார அமைப்பு விசாரணை நடத்தி வருகிறது எனக் குறிப்பிட்டுள்ளது.

மேலும் இந்த மருந்துப் பொருட்கள் இதுவரை காம்பியாவில் மட்டுமே கண்டறியப்பட்டாலும் அவை மற்றநாடுகளுக்கும் விநியோகப்பட்டிருக்கலாம் என கூறப்பட்டுள்ளது.

அசம்பாவிதங்களை தவிர்க்கும் விளைவாக அனைத்து நாடுகளும் இந்த தயாரிப்புகளை கண்டறிந்து அவற்றை புழக்கத்தில் இருந்து அகற்ற வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இந்த நான்கு மருந்துகளில் ஒவ்வொன்றின் மாதிரிகளையும் பரிசோதனை செய்ததில் அவற்றில் ஏற்றுக்கொள்ள முடியாத அளவு டைதிலீன் கிளைகோல் மற்றும் எத்திலீன் கிளைகோல் ஆகியவை இருப்பதை உறுதிப்படுத்துகிறது எனக் குறிப்பிட்டுள்ளது. (நி)

# தாய்லாந்தில் துப்பாக்கிச்சூடு 31 மாணவர்கள் உயிரிழப்பு

(தாய்லாந்து)

தாய்லாந்தில் உள்ள ஆரம்ப பாடசாலை குழந்தைகள் பராமரிப்பு மையத்தில் முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் சுமார் 31பேர் வரை கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தார்.

நாட்டின் வடகிழக்கில் உள்ள நோங் புவா லாம்புவில் இடம்பெற்ற இந்த தாக்குதலுக்குப் பின்னர் துப்பாக்கிதாரி இன்னும் தலைமறைவாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தியவர் குழந்தைகள் மற்றும் பெரியவர்களை துப்பாக்கியால் சுட்டு, கத்தியால் குத்தியுள்ளார்.

சந்தேகநபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளதுடன், தாக்குதலுக்கான நோக்கம் தெளிவாக இல்லை என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதன் காரணமாக, உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

குறித்த அதிகாரி அண்மையில் பொலிஸார் பணியில் இருந்து நீக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

## வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அதனால் ஏற்பட்ட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு காரணமாக இலங்கையர் பலர் உள்நாட்டில் வேலையின்றி தவிக்கின்றனர்.

குறிப்பாக கட்டுமான தொழிலில் ஈடுபட்டோர் மூலப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக வேலைகளை இழந்துள்ளனர்.

இதனால் குடும்பத்தை காப்பாற்றுவதற்கு பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் குடும்பத்தை காப்பாற்றவும் அதிகரித்த வாழ்க்கைச் செலவை ஈடு செய்யவும் தொழில்களை தேடி வெளிநாடுகளுக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதனை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும் உறுதிப்படுத்தியுள்ளது.

இதன்படி இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் தொழிலுக்காக 237,649 பேர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்தது.

இதன்போது கடந்த வருடம் முழுவதும் சுமார் 122,000 பேர் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றிருந்ததாக பணியகத்தின் பொது முகாமையாளர் டி.டி.பி.சேனாநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் தொழிலுக்காக வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை இந்த வருடம் இரட்டிப்பாக அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மருந்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு சிறுவர் மருத்துவமனையின் முன்பு போராட்டம்

(கொழும்பு)

கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் சிறுவர்களுக்கு மருந்து மற்றும் உணவுப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யக்கோரி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக போராட்டத்தில் கலந்து கொண்ட மருத்துவமனையின் ஊழியர்கள் தெரிவித்தனர். (நி)

# செயற்கைக் கால் பொருத்தும் முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து செயற்கைக்கால் பொருத்தும் முகாமை எதிர்வரும் 12 ஆம் திகதி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் முல்லைத்தீவு மாவட்ட பயனாளிகளுக்காக எழுகை மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் மண்டபத்தில் நடத்தவுள்ளது.

செயற்கைக்கால் பொருத்த விரும்பும் பயனாளிகள் புதுக்குடியிருப்பு சமூக சேவைகள் உத்தியோகத்தருடனோ அல்லது யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன வெளிக்கள உத்தியோகத்தருடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 94

ரஷ்யாவுடனான தூதரகத் தொடர்புகளைத் துண்டித்து, பொதுமக்கள் அணிதிரட்டலை அறிவித்தார். இந்தப் படையெடுப்பு பரவலான பன்னாட்டுக் கண்டனத்தைப் பெற்றது. ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன.

ரஷ்ய வங்கிகள் மீது அமெரிக்கா தடைகளை அறிவித்த பிறகு மொஸ்கோவின் பங்குச் சந்தை 45 சதவீதம் சரிந்தது.

**உக்ரைன் VS ரஷ்யா: இராணுவ வலிமை**

| | யுக்ரேன் | ரஷ்யா |
|---|---|---|
| படை வீரர்கள் | 1,100,000 | 2,900,000 |
| பணியில் | 200,000 | 900,000 |
| ரிசர்வ் படையினர் | 900,000 | 2,000,000 |
| படை விமானம் | 98 | 1,511 |
| தாக்கும் ஹெலிகாப்டர்கள் | 34 | 544 |
| டாங்கிகள் | 2,596 | 12,240 |
| கவச வாகனங்கள் | 831 | 30,122 |
| பீரங்கி | 1,818 | 7,571 |

*Note: ரிசர்வ் படை எண்ணிக்கை 5 ஆண்டுகளுக்குள் ஓய்வு பெற்றவர்களையும் உள்ளடக்கியது

ஆதாரம்: Military Balance 2022 BBC

**தாக்குதலை நியாயப்படுத்திய புடின்**

உக்ரைனில் இருந்து மேற்கொள்ளப்படும் இராணுவ அச்சுறுத்தல்கள் அதிகரித்து வரும் நிலையில் அதற்கு பதிலடியாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் நோக்கம் உக்ரைனை தனது நாட்டுடன் இணைப்பது அல்ல என்றும் அந்த பிராந்தியத்தை இராணுவ ஆதிக்கத்தில் இருந்து விடுவித்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவது தான் என்றும் அவர் கூறினார்.

**பெப்ரவரி 25, 2022**

உக்ரைனிய பாதுகாப்புப் படை, ஒரு ட்வீட்டில் வயதை பொருட்படுத்தாமல் பொதுமக்களுக்கு ஆட்சேர்ப்புக்கான அழைப்பை வெளியிட்டது. படைத் தளபதியின் ஓர் அறிக்கை, "வயது கட்டுப்பாடுகள் இல்லை," என்று குறிப்பிட்டிருந்தார். அது 18 வயதுக்கும் கீழுள்ளவர்களும் சேர்க்கப்படலாம் என்பதை குறிப்பதைப் போல் இருந்தது.

இருப்பினும், பாதுகாப்புத் துறை அமைச்சர் அலெக்ஸே ரெஸ்னிகோவின் புதிய அறிக்கை, "வயதுக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவது, 60 வயதுக்கு மேற்பட்டவர்களைக் குறிக்கிறது என்றும் சிறார்களைக் குறிக்கவில்லை என்றும் தெளிவுபடுத்தியது.

**பெப்ரவரி 26, 2022 இல் உலகளாவிய நிதிய அமைப்பில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ரஷ்ய வங்கிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்தது.**

SWIFT என்றால் என்ன?

SWIFT என்பது உலகளாவிய நிதிப் பரிவர்த்தனைகளுக்கான சேவை அமைப்பு ஆகும். அதாவது, எல்லைகளைத் தாண்டி பணத்தை பாதுகாப்பாகவும் விரைவாகவும் அனுப்ப இந்த முறை அனுமதிக்கிறது. SWIFT என்பது, Society for Worldwide Interbank Financial Telecommunication என்பதன் சுருக்கமாகும். 1973 இல் இது பெல்ஜியமில் உருவாக்கப்பட்டது. SWIFT 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் 11,000 வங்கிகள் மற்றும் நிறுவனங்களை இணைக்கிறது.

ஆனால் SWIFT என்பது பாரம்பரிய வங்கி அல்ல. இது ஒரு வகையான உடனடி செய்தியிடல் அமைப்பாகும். பணம் அனுப்பப்பட்ட பிறகும் பெறப்பட்ட பிறகும் பயனர்களுக்கு தகவல் அளிக்கிறது. இது ஒரு தினத்தில் 40 மில்லியனுக்கும் அதிகமான செய்திகளை அனுப்புகிறது. ஏனெனில் நிறுவனங்கள் மற்றும் அரசுகளுக்கு இடையில் டிரில்லியன் கணக்கான டொலர்கள் கைமாறுகின்றன. அந்த செய்திகளில் 1% க்கும் அதிகமானவை ரஷ்ய கட்டணங்களை உள்ளடக்கியவை என்று கருதப்படுகிறது.

(தொடரும்)

# சூரியனில் ஏற்பட்ட வெடிப்பால் பூமிக்கு ஆபத்து- நிபுணர்கள் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

**சூரியனிலிருந்து 2 இலட்சம் கிலோமீற்றர் நீளமுள்ள இழை ஒன்று வெடித்து சிதறியுள்ளது.அந்த வெடிப்பினால் சிதறிய காந்தத் துகள்கள் பூமியைத் தாக்கக் கூடும் என நிபுணர்கள் கணித்துள்ளனர். நாசா சோலார் அப்சர்வேட்டரி சூரியனில் ஏற்படும் மாற்றங்களைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.**

மேலும் சில சூரிய வெடிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்த சூரிய வெடிப்பினால் ஏற்படும் சிதறல்களால் ரேடியோ தகவல் தொடர்புகள், மின்சக்தி கட்டங்கள், மின்சார சிக்னல்கள் மட்டுமின்றி விண்வெளி வீரர்கள், விண்கலங்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படுத்தலாம் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

சூரிய மேற்பரப்பில் 1,30,000 கிலோமீற்றர்கள் முழுவதும் 10க்கும் அதிகமான இருண்ட கருக்களைக் கொண்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை காலை சூரியனில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதுடன் ஒக்டோபர் 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் இருந்து சூரியப்புயல் வெளியேறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இந்தியாவில் உத்தரகாண்ட் பள்ளத்தாக்கில் பேருந்து கவிழ்ந்து 25 பேர் உயிரிழப்பு



(டில்லி)

இந்தியாவில் உத்தரகாண்டில் பள்ளத்தாக்கில் பேருந்து கவிழ்ந்து 25 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

உத்தரகாண்ட் லால்தாங் பகுதியில் இருந்து பவுரி கர்வால் மாவட்டத்தில் உள்ள பிரோன்காலில் நடைபெறும் திருமண விழாவில் பங்கேற்பதற்காக 50 இற்கும் மேற்பட்டவர்கள் பேருந்தொன்றில் பயணித்துக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில், மலைப்பாங்கான பகுதியில் இரவு 7.30 மணியளவில் பேருந்து சென்று கொண்டிருந்த போது சிம்ரி என்ற இடத்தில் உள்ள வளைவில் திரும்பும்போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த கோர விபத்தில் பேருந்தில் பயணித்த 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், பள்ளத்தாக்கில் இருந்து 21 பேரை மீட்புப் படையினர் மீட்டுள்ளனர். இதில் காயமடைந்தவர்களை அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். (நி)

# வடகொரியா மீண்டும் ஏவுகணை பரிசோதனை

(பியாங்யாங்)

வடகொரியா கிழக்கு நோக்கி இரண்டு குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவி சோதனை செய்துள்ளதாக தென் கொரியாவின் கூட்டுப் பணியாளர்கள் மற்றும் ஜப்பானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமெரிக்கா பிராந்தியத்திற்கு ஒரு விமானம் தாங்கி கப்பலை மீண்டும் நிலைநிறுத்திய பின்னர் மற்றும் தென்கொரியாவுடன் கூட்டு இராணுவ பயிற்சிகளை மேற்கொண்ட பிறகு இந்த சோதனை நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இரண்டு வாரங்களுக்குள் தடை செய்யப்பட்ட ஆறாவது ஏவுகணையை வடகொரியா நேற்று (வியாழக்கிழமை) சோதனை செய்துள்ளது.

முதல் ஏவுகணை வடகொரியாவின் தலைநகர் பியாங்யாங்கிற்கு அருகிலுள்ள ஒரு தளத்தில் இருந்து காலை 6.01 மணிக்கு ஏவப்பட்டது. இரண்டாவது ஏவுகணை 22 நிமிடங்களுக்கு பிறகு சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்த சோதனை நடவடிக்கையை முற்றிலும் பொறுத்துக் கொள்ள முடியாது என ஜப்பானிய பிரதமர் ஃபுமியோ கிஷிடா கண்டித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில் மோதி...

நேற்று வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து காங்கேசன் துறை நோக்கி பயணித்த தபால் புகையிரதத்துடன் மோதுண்டதிலேயே குறித்த விபத்தானது இடம்பெற்றது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் அடையாளம் காணப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(ம-7,18,33,104)

## மின்னல்...

தெல்லிப்பளைப் பகுதியில் மின்னல் தாக்கி இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பளை கிழக்கைச் சேர்ந்த மகாலிங்கம் இராகவன் (வயது-34) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் அம்பனைப் பகுதியில் உள்ள தமது தோட்டத்தில் தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த தந்தைக்கு உணவினை கொண்டு சென்றவேளை தோட்டப் பகுதியில் மின்னல் தாக்கி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் - தெல்லிப்பளை காங்கேசன்துறை பகுதிகளில் நேற்று வியாழக்கிழமை காலை திடீரென கடும் மழை இடி மின்னலுடன் பெய்திருந்தது.

அவ்வேளையிலேயே மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளான்.

(ம-7,18,33,104)

## அபிலாசைகளை...

ஜெனிவாவில் நேற்று இலங்கை குறித்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பிற்கு முன்னர் ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி இந்திர மணிப்பாண்டே இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தும் விடயத்தில் இந்தியா எப்போதும் தமிழ் மக்களின் சமத்துவம், நீதி, கௌரவம், அமைதி, ஐக்கியம் ஆகிய அபிலாசைகளிற்கு ஆதரவளித்தல் இலங்கையின் இறைமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டிற்கு ஆதரவளித்தல் என்ற இரு அடிப்படைக் கொள்கைகளால் வழிநடத்தப்பட்டுள்ளது.

13வது திருத்தத்தை நடைமுறைப் படுத்துதல் அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வு மாகாண சபை தேர்தல்களை முன்கூட்டியே நடத்துதல் குறித்த இலங்கை அரசாங்கத்தின் உறுதி மொழிகளை நாங்கள் கருத்தில் எடுத்துள்ளோம்.

இது தொடர்பான முன்னேற்றம் போதுமானதல்ல என நாங்கள் கருதுகின்றோம்.

அனைத்து இலங்கையர்களிற்கும் பொருளாதார செழிப்பை ஏற்படுத்துவதும் இலங்கையில் தமிழ் மக்களின் கௌரவம் அமைதி மற்றும் பொருளாதார வளம் ஆகியவற்றிற்கான நியாய பூர்வமான அபிலாசைகளை நிறைவேற்றுவதும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்.

இலங்கையில் தமிழர்களின் நியாய பூர்வமான அபிலாசைகளை நிறைவேற்றுவது அனைத்து இலங்கையர்களிற்குமான பொருளாதார செழிப்பு ஆகியவற்றை உறுதி செய்வதற்காக இந்தியா இலங்கை மற்றும் சர்வதேச சகாக்களுடன் இணைந்து செயற்படும் என்றார். (ம-7)

## ஜெனிவா பிரே...

உரையாற்றிய அவர், இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட இந்த பிரேரணை இலங்கையின் அனுமதியோ அல்லது ஆலோசனையோ இன்றி முன்வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இது இலங்கைக்குப் பாதகமான பிரேரணை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## ஜெனிவாத்...

வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

ஜனநாயக விழுமியங்கள், மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி குறித்த முழுமையான அனைவரையும் உள்வாங்கும் கலந்துரையாடல்களிற்கு முழுமையான ஆதரவளிப்போம் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ம-7)

## எதிர்வரும்...

விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதன்போது, உலகளாவிய தாக்கம் காரணமாக எதிர்வரும் டிசம்பர், ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் எரிபொருள் விலை அதிகரிக்கலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பல தீவிரமான பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நாம் பல தீவிரமான பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

## ஐ.நா...

ஆதரவை வெளியிட்டுள்ளது.

தொடர்புபட்ட நாட்டின் இணக்கம் இல்லாமல் உருவாக்கப்பட்டுள்ள இந்த தீர்மானம் அரசியல்மயமாக்கலின் விளைவு என சீனா தெரிவித்துள்ளது. (ம-7)

## மேலதிக...

பிரேரணை மீதான வாக்கெடுப்பு நேற்று மனித உரிமைகள் பேரவையில் நடைபெற்றது.

இலங்கை குறித்த புதிய பிரேரணைக்கு ஆதரவாக 20 நாடுகள் வாக்களித்துள்ளன. பிரேரணைக்கு எதிராக 7 நாடுகள் வாக்களித்துள்ளன. வாக்கெடுப்பில் 20 நாடுகள் கலந்து கொள்ளவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் கடந்த செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமான நிலையில், அன்றைய தினமே இலங்கை தொடர்பான மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கையின் சாராம்சம் வாசிக்கப்பட்டு, அதுகுறித்த விவாதமும் இடம் பெற்றது.

அதன் தொடர்ச்சியாக பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகள் இணைந்து 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பில் தயாரித்துள்ள புதிய பிரேரணை மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. (ம-7)


# வேலைவாய்ப்பு

- அலுவலக செய்தியாளர் (இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
- பொதுசனத்தொடர்பு உத்தியோகத்தர் (பெண்கள், சிங்கள மொழித் தேர்ச்சி)

**தகைமை**

- க.பொ.த உயர்தரத்தில் சித்தி
- 25 வயதுக்கு மேல்
- யாழ்.நகரத்தில் இருந்து 5 KM தூரத்துக்குள் நிரந்தர வசிப்பிடம்

தகைமையும் விருப்பமும் உள்ளவர்கள் இன்று (07.10.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

முகாமையாளர்
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு - 076 097 3121



தன நிதானய
திகதி - 2022.10.06
சீட்டிழுப்பு இலக்கம் - 930
Z 23 34 68 78

மஹஜன சம்பத
திகதி 2022/10/06
சீட்டிழுப்பு இலக்கம் 4900
B 5 8 5 2 3 3
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.10.06
சீட்டிழுப்பு இலக்கம் 209
சிம்மம் 01 13 27 32 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 06/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1248
Z 02 23 47 57 59

கொவிசெத
திகதி 2022.10.06
சீட்டிழுப்பு இலக்கம் 3142
N 37 41 56 77
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 06/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1355
ரிஷபம் 3 1 7 1 6 1
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1875
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.10.06
தினம் வியாழக்கிழமை
E 12 16 26 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,647,300/-

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.06
சீட்டிழுப்பு இல : 4036
வர்ணம் : சிவப்பு
ரூ. 4,265,400/-
வெற்றி இலக்கங்கள் 13 18 46 52 U

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,648,796.40
திகதி 2022-10-06
வெற்றி வாரம் 3587
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 30 32 33 47
கும்பம்
ரூ. 8,419,540/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 24 11 38 43 62
சுப்பர் இலக்கம்
1051
செம்மஞ்சள்
2022.10.06
வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 267,543,599.80
011-2 333 546-47
Web : www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 533
திகதி 2022-10-06
வர்ணம் நீலம்
B 09 46 51 03
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 13,151,444/-
Web: www.dlb.lk

அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1701
சீட்டிழுப்பு திகதி : 2022.10.06
ரூ. 4,623,480/-
10 11 17 29 Z


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

மிக்சர் வகைகள் பொதியிடல் (packing) வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு (13028)

**076 986 5238**

---

தமிழ்/ ஆங்கில மொழி மூலம்

## A/L இரசாயனம்
## O/L கணிதம்

யாழ். நகரப் பகுதிகளில் பட்டதாரி ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.

தொடர்பு (13021)

**071 257 9018**

---

## மாபிள் கிளீனர்

சமையல் அறை, Bathroom, Toilet அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

தொடர்பு (13020)

**077 803 3199**

---



அமெரிக்க லொத்தர் இலவச விசா

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

Passport அவசியமில்லை

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள் (C-4921)

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

**V2 Travels 0768226244**

---

## காசி சீரடிபாபா யாத்திரை

**ஆரம்பம் 4.11.2022, நாட்கள் - 18, யாத்திரிகர் -15**

**தரிசிக்குமிடங்கள்**

டெல்லி, அட்சயதாம், நாராயணர் கோவில், இந்திராகாந்தி வீடு, இந்தியா கேற், வேறு இடங்களும் பார்க்கலாம். ஆக்ரா, தாஜ்மகால், செங்கோட்டை, மதுரா, கிருஷ்ணஜென்ம பூமி, பிரேம்மந்திரம், அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், சயன ஆஞ்சனேயர், நேரு வீடு, சங்கராச்சாரியார் மண்டபம், கயா, முன்னோர்களுக்கு பிதுர்கடன் சிரார்த்தம் செய்யும் இடம். புத்தகாய, புத்தாலயங்கள், காசி, விஸ்வநாதர், விசாலாட்சி, காளபைரவர் உட்பட 15 இடங்கள் தரிசனம்.

மாலை 6.30 இற்கு கங்கா ஆர்த்தி பார்த்தல் காசியில் 8 நாட்கள் தங்கி சீரடி பாபா தரிசனம், சனி சிங்கனாப்பூர், இன்னும் பல இடங்களும் போகலாம். சீத்தாமடி, சீதை பூமியுள் புதையுண்ட இடம், திரியம்பகேஸ்வரர், ஜோதிலிங்கமும் மற்றும் இராமேஸ்வரம் 21 தீர்த்த மாடல், இராமேஸ்வரலிங்க வழிபாடு(சிவதரிசனம்), நவபாஷாணம், திருப்புலானி, உத்திரகோச மங்கை பார்த்து மதுரை மீனாட்சி தரிசனம் முடித்து சென்னை வருகை.

**1 நாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். மறுநாள் நாடு திரும்பல்**

**பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்**

5 விமானப் பயணங்கள், 3 வேளை பிராமண சமையல் ஆட்கள் சமைத்த சைவ உணவு. ரீ,கோப்பி, மினரல் வோட்டர், A/C வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரேன் கொமட், இணைந்த குளியலறை மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லவும் பயணம் முடிய திரும்பி யாழ்ப்பாணம் வரவும் வாகன ஒழுங்கு வசதிகள் செய்து தரப்படும் மேலும் விபரங்களை கேட்டு பதிவு செய்யவும்.

**தென்னிந்திய யாத்திரை** **ஆரம்பம் : 06.12.2022** (C-5043)

தென்னிந்திய யாத்திரை, தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி, உச்சிப் பிள்ளையார், திருப்பதி, ஸ்ரீரெங்கம், இராமேஸ்வரம், சமயபுரம், மேல்மருவத்தூர், பழனி, திருத்தனி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, சிதம்பரம், தஞ்சாவூர், காளகஸ்திரி, ஏகாம்பரேஸ்வரர், திருவண்ணாமலை, திருவாளைக்காவல் 9 நவக்கிரக ஆலயங்கள், தோணியப்பர், குருவாயூர், சாமுண்டீஸ்வரி, சுசீந்திரம், பஞ்சவடி, கன்னியாகுமாரி, திருக்கடையூர், மணக்குழ விநாயகர், பத்மந்த சுவாமி அனந்தமங்கலம், 60 இற்கு மேலான ஆலயங்களை தரிசிப்பதுடன் சில சுற்றுலா இடங்களும் காணலாம் நாட்கள் 16 இரு வழிவிமான ரிக்கட், சைவ உணவு, குடிநீர் A/C வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை வெஸ்ரன்கொமட் இணைந்த அறைகள்

கலாநிதி T.ஸ்ரீரெங்நாதன்/ மகன் ராஜன்
இல. 59-3/6 செட்டியார் தெரு கொழும்பு - 11
T.P-077 768 0102/ 077 736 2154
E.mail-sriranganathan2601@gmail.com

---

## காணி விற்பனைக்கு

சங்கானை தேவாலய வீதியில் அமைந்துள்ள (சங்கானை நகரத்தில் இருந்து 500M) 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

**077 038 9787**

(தரகர்கள் தேவையில்லை) (13010)

---

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603,
076 097 3127

---

## ANNAI MUTHTHUMARI
## அன்னை முத்துமாரி

**(Village Hotel)**

COLOMBO ⇌ JAFFNA ⇌ VALVETITHURAI



**RS.3000**

Direct Booking

நேரடி ஆசனப் பதிவு

தொடர்புகளுக்கு

BOOKING NUMBER

**077 544 8503**

(12979)

---

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

### பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

(13027)

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 241 7589**


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
19 . 10 . 1979



உதிர்வு
07 . 09 . 2022

(C-5042)

கடந்த 07.09.2022 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

அமரர் **உதயநாயகம் சத்தியா** ( கண்ணா )

திங்களொன்று ஆனதம்மா
அன்பு கொண்ட உம் வதனம்
அருகினில் இருப்பது போல்
உணர்கின்றோம் அன்பால் என்றும்!

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.10.2022) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு பருத்தித்துறை கல்லூரி வீதியில் அமைந்துள்ள தாமரைக்குளத்தடி அந்தியேட்டி கிரியை மண்டபத்திலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந் து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

மற்றும் எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு அணைந்த செய்தி அறிந்து நேரில் வந்து உதவிகள் புரிந்தவர்கள், தொலைபேசி ஊடாகவும் துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது குடும்பம் சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வெஸ்லி ஒழுங்கை,
கல்லூரி வீதி, பருத்தித்துறை.

077 377 1239

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.